பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 26 | சனிக்கிழமை | 08.06.2024 | அதிர்வு 312

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஆர்வம் இல்லை

### இப்படி விக்கி கூறுகின்றார்



ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களுக்குக் காணப்படும் ஆர்வம் தமிழ் மக்களுக்கு இல்லை என்று தமிழ் மக்கள் 06



# தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்காமல் இலங்கைக்கு விடிவு காலம் பிறக்காது!

## சபையில் சிங்களத் தலைவர்களிடம் சாணக்கியன் எம்.பி. இடித்துரைப்பு

"தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வையும் சம அந்தஸ்தையும் வழங்காது இலங்கைத் தீவை அபிவிருத்தி செய்ய முடியும் என்பது வெறும் கனவு மாத்திரமே என்பதைப் பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார். 06

# சம்பந்தனும் சுமந்திரனும் தமிழினத்தின் துரோகிகள்

## மஹிந்தவின் சகா ரோஹித கொதிப்பு



"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான இரா.சம்பந்தனும், எம்.ஏ. சுமந்திரனும் தமிழினத்துக்குத் துரோகம் செய்தவர்கள்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். 06




கொழும்பு றோயல் பார்க்கில் இளம் யுவதியைப் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட சமந்த ஜயமஹாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பளித்து விடுவித்த விவகாரம் சர்ச்சையாகி, அந்த மன்னிப்பைக் குப்பைக்குள் கடாசிவிட்டது உயர்நீதிமன்றம்.

நாட்டை விட்டு வெளியேறி விட்ட அந்த சமந்த ஜயமஹாவை மீண்டும் நாட்டுக்குள் கொண்டு வந்து சேர்த்து, தண்டனையை அனுபவிக்கச் செய்யுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு விட்டது. 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally






# போட்டி நிறைந்த ஏற்றுமதிச் சந்தையை வெல்லக்கூடிய உற்பத்திப் பொருள்களில் கவனம் செலுத்த வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நெல் உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து போட்டிமிக்க ஏற்றுமதிச் சந்தையை வெற்றிகொள்ளக்கூடிய உற்பத்திப் பொருள்களில் அதிக கவனம் செலுத்தி 2030 ஆம் ஆண்டளவில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போட்டி விவசாயத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இல்லையெனில் எதிர்காலத்தை வெற்றிகொள்ள முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஏற்றுமதி சந்தையில் போட்டியை எதிர்கொள்ள முடியாத உற்பத்திகளை கைவிடுவதே சிறந்ததெனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், முன்னோடித் திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் விவசாயம் மற்றும் மீன்பிடி அமைச்சுக்களின் கீழ் உள்ள திட்டங்கள், இளைஞர் விவசாய-தொழில்முனைவோர் கிராமங்களை நிறுவுவதற்கான திட்டங்கள் மற்றும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் தனியார் துறையின் பங்களிப்பு ஆகியவை அடங்கும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி சந்தைக்கான பொருள்களை போட்டித்தன்மையுடன் வழங்குவதும், அதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையை வெல்வதும், அந்நியச் செலாவணி மற்றும் விவசாயப் பொருளாதாரத்தை அதிகரிப்பதும் இந்த திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் இலக்குகளாகும்.

இந்த இலக்குகளை அடைவதற்காக, குரங்குகள் மற்றும் காட்டு யானைகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு பொருத்தமான பொறிமுறையைத் தயாரிப்பது குறித்து வெகுவாக ஆராயப்பட்டது.

எதிர்கால ஏற்றுமதி சந்தையில் போட்டியை எதிர்கொள்வதற்கு நவீன தொழில்நுட்பம் இன்றியமையாதது எனவும், விவசாய நிலங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவை எனவும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட தனியார் துறை பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கை எனும் தனித்துவத்துடன் கூடிய பொருள்களை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கு தற்போதுள்ள தடைகளை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையீடு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# ரயில் சாரதிகள் பணிப்புறக்கணிப்பு குறுந்தூர ரயில் சேவைகள் பாதிப்பு






ரயில் சாரதிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பின் இரண்டு பிரதான ரயில் நிலையங்களிலிருந்து ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படாதென லொக்கோமோட்டிவ் ஒப்பரேட்டிங் எஞ்சினியர்ஸ் தொழிற்சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி.எம். சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வு வழங்கப்படாமை, ஆள்சேர்ப்பில் நிலவும் தாமதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரி இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையே, குருநாகல் ரயில் நிலையத்தின் ஊடாக பயணிக்கும் அலுவலக ரயில்கள் வழமைபோன்று இயங்கியுள்ளன.

எனினும், ரயில் சாரதிகள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பினால் குறுந்தூர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சில ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே. இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பினால் 43 குறுந்தூர ரயில் சேவைகள் நேற்று இரத்து செய்யப்பட்டன.

# ஜூன் 17 ஆம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள்: கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவிப்பு



நாட்டின் சில பகுதிகளில் துல்ஹஜ் மாத தலைப்பிறை தென்பட்டுள்ளமையால், எதிர்வரும் 17 ஆம் திகதி ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படும் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு மஹ்ரிப் தொழுகையின் பின்னர் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று நடைபெற்றது.

பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாப் பிரதிநிதிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, நாட்டின் பல பகுதிகளில் துல்ஹஜ் மாத தலைப்பிறை தென்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்தமையினால், இலங்கைவாழ் முஸ்லிம்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடலாம் என தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு முன்னைய நாள் அரபா நோன்பை நோற்குமாறும் நேற்று அறிவிக்கப்பட்டது.

# வைத்தியசாலையில் இருந்து சிறைக் கைதி தப்பியோட்டம்!

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காலி சிறைச்சாலை கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

32 நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் காலி சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இவர் வைத்தியசாலையின் கழிவறையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் கழிவறைக்குச் செல்ல வேண்டும் எனக் கூறியுள்ளார். கழிவறைக்குச் செல்வதற்காகக் கை விலங்குகளை அகற்றிய சிறைச்சாலை அதிகாரிகள், பாதுகாப்புக்காகக் கழிவறைக்கு முன்பாகக் காத்திருந்தனர். எனினும், அவர் கழிவறையிலிருந்து பாய்ந்து தப்பிச் சென்றுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.






# நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதைக்கு திருப்புதவற்கான முதல் அடியை வைத்துள்ளோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை சமர்பித்து நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதைக்கு திருப்புவதற்கான முதல் அடி வைக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜா–எல – ஏக்கல பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் Cephalosporin ஊசி மற்றும் மெல்டோல் மருந்து உற்பத்தி தொழிற்சாலையை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மெல்வா கூட்டு நிறுவனத்தின் கீழ் Sands Active தனியார் நிறுவனத்தினால் இந்த உற்பத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், நிறுவனத்தின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்துவைத்த பின்னர் ஜனாதிபதி தொழிற்சாலையை மேற்பார்வையிட்டார்.

இதன்போது மெல்வா கூட்டு வியாபாரத்தின் தலைவர் பெரியசாமிபிள்ளை ஆனந்தராஜாவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

"நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற வேளையில் நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்தது. இந்நிலையிலிருந்து மீண்டு வர 05 – 06 வருடங்கள் ஆகலாம் என்று பலரும் கூறினர். எதிர்காலம் இருக்காது என்று அஞ்சி பலரும் நாட்டை விட்டுச் சென்றனர். இருப்பினும் இரு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை நல்ல நிலைக்கு கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது.

எந்த அளவு கஷ்டங்கள் இருந்தாலும், பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், சிறிது காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி வலுவான வாழ்க்கைச் சூழலை கட்டியெழுப்ப வேண்டிய தேவை காணப்பட்டது. அதற்காகவே வற் வரி அதிகரிக்கப்பட்டது. அதனால் மக்கள் திட்டித் தீர்த்தனர். ஆனாலும் இரு வருடங்கள் முடியும் முன்பாகவே ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்தி முன்னோக்கிச் செல்ல முடிந்தது.

கடந்த காலங்களில் நல்ல அறுவடை கிடைத்தது. நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வர ஆரம்பித்தனர். நாட்டு மக்களின் முயற்சியினாலும், அரசாங்கத்தின் சரியான வேலைத்திட்டத்தின் பயனாகவும் முன்னோக்கிச் செல்ல முடிந்திருக்கிறது. நாட்டின் உண்மை நிலையை மறந்து விட்டு வேடிக்கைப் பேச்சுப் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. 05















# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரானார் ரோஹித



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக்குழு, அரசியல் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு விஜேராமையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது என கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமைச்ச விஜேதாஸ ராஜபக்ஷ தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அவர் மற்றுமொரு கட்சியின் தவிசாளராக பதவியேற்றுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பில் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும் அனுமதியும் நிறைவேற்றுக்குழு மற்றும் அரசியல் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாக சாகல காரியவசம் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதைக்கு திருப்புதவற்கான முதல் அடியை வைத்துள்ளோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் உண்மையான அரசியல் நிலைமை தொடர்பில் பேச முடியாதிருப்பதாலும், அதற்கு தீர்வு தேட முடியாத நிலை காணப்படுவதாலும் இளையோர் அரசியலில் இருந்து விலகியுள்ளனர். அதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடிக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இன்னும் சில மாதங்களில் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடும். சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறோம். அதனால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டாது. ஒரே இடத்தில் இருந்தால் நாம் மீண்டும் வீழ்ந்து விடுவோம். அதனால் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

நாம் முன்னோக்கிச் செல்வதற்காக போலி வாக்குறுதிகளை வழங்கக் கூடாது. பலரும் போலி வாக்குறுதி அளிக்கிறார்கள். ஆனால் எம் மீது பல பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன. அதனைப் புரிந்துகொண்டு போலி வாக்குறுதிகளை வழங்குவதை நிறுத்த வேண்டும்.

தற்போது அரசாங்கம் பொருளாதார மறுசீரமைப்புச் சட்டத்தை சமர்பித்துள்ளது. அதற்குள் பல இலக்குகள் உள்ளன. 2027 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 5 சதவீதமான காணப்பட வேண்டும். இதுவரையில் பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமானத்திலேயே காணப்படுகிறது. அதனால் 2027 இற்குப் பின்னர் 8 சதவீத வளர்ச்சியை நோக்கி நகர வேண்டிய தேவையும் உள்ளது.

நாடு அபிவிருத்தி அடையும் போது 15 வருடங்களுக்கு 8 சதவீத பொருளாதார வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பல நாடுகள் அபிவிருத்தி கண்டுள்ளன. சீனா, வியட்நாம், மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், பங்களாதேஷ் உள்ளிட்ட பல நாடுகளும் அபிவிருத்தியை நோக்கிச் செல்கின்றன.

நாட்டின் தொழில் இன்மை பிரச்சினையை 2025ஆம் ஆண்டளவில் 5 சதவீதமாக மட்டுப்படுத்த வேண்டியது அவசியம். 2040 களில் நாட்டில் ஏற்றுமதி பொருளாதாரம் காணப்பட வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்காக இதனைச் செய்ய முடியுமென இணக்கப்பாட்டை எட்ட வேண்டும். அந்த இணக்கப்பாடுகளையும் சட்டமாக்குவோம்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், எந்த தலைவர் நாட்டை பொறுப்பேற்றாலும் அந்த இலக்குகளை நோக்கி நகர வேண்டியது அவசியம். அதனால் பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கான முதல் அடியை வைத்திருக்கிறோம். அடுத்த இரண்டு, மூன்று வருடங்களில் நாட்டின் இளையோருக்கு நல்ல நாடு குறித்த எதிர்பார்ப்பை ஏற்படுத்துவோம்.

அதற்காக மக்களின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். இன்று கிராமப்புற மக்களின் வருமானம் குறைவாக உள்ளது. நவீன விவசாயத்தின் மூலம் விவசாய ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கி கிராமப்புற மக்களின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். தனியார் துறையினரின் பங்களிப்புடன் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்போது நாட்டில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. சுற்றுலாத்துறை மூலம் வருடத்திற்கு 25 லட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்க எதிர்பார்க்கிறோம். அதற்கு தற்போதைய ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கை போதாது. எனவே, புதிய ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

மேலும், சுற்றுலா வர்த்தகத்திற்கான கடன் வசதிகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் தொழிற்பயிற்சித் துறைகள் தனியார் துறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு நிகழ்காலத்திற்கு ஏற்ற தொழில் வல்லுநர்களை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். குறிப்பாக தகவல் தொழிநுட்பத் துறைக்கு, டிஜிட்டல் துறையை மேம்படுத்த அரசாங்கம் பணம் வழங்க முடியும். இதற்கு முன்வரும் இளைஞர்களுக்கு நாம் உதவ வேண்டும்.”
– என்றார்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் அது சாத்தியப்படக்கூடிய விடயமாகத் தெரியவில்லை.

சம்பந்தப்பட்ட சமந்த ஜயமஹா என்ற நபர் இப்போது சிங்கப்பூரில். அங்கிருந்து அவரை நாடு கடத்தச் செய்வது சாத்தியமா என்பது தெரியவில்லை.

முன்னர் பல்லாயிரம் கோடி ரூபா ஊழல் சம்பந்தப்பட்ட பிணைமுறி வழக்கில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மகேந்திரனை சிங்கப்பூரிலிருந்து நாடு கடத்தச் செய்வதற்கு மைத்திரி அரசு பட்ட பாடு பலன் தரவில்லை. இது தொடர்பாக நீதிமன்றத்தின் பல்லாயிரம் ஆவணங்கள், கடிதங்களின் பிரதிகளை உறுதிப்படுத்தி, அவை ஒவ்வொன்றிலும் கை வலிக்க வலிக்க பல மணி நேரம் உட்கார்ந்து இருந்து ஒப்பமிட்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூருக்கு அவற்றை அனுப்பி வைத்தமைதான் மிச்சம். அதற்கு மேல் எதுவும் நடக்கவில்லை.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் அத்தகைய கைதிகள், குற்றவாளிகள், சந்தேகநபர்கள் பரிமாற்றத்திற்கான ஒப்பந்தங்கள் ஏதுமில்லை என்று கூறப்பட்டது.

ஆனால் இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையில் அத்தகைய ஒப்பந்தங்கள், உடன்பாடுகள், ஏற்பாடுகள் இருக்கின்றன.

அந்தப் பின்புலத்தில் இங்கு குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட இரு தமிழர்கள் லண்டனில் இப்போது சிக்கி இருக்கின்றமை குறித்து பிரிட்டனில் கடந்த நான்காம் திகதி புதன்கிழமை ஒரு பகிரங்க அறிவிப்பு வெளியாகி இருக்கின்றது.

பிரிட்டனின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றது.

“2000 ஆம் ஆண்டுகளின் காலத்தில் இலங்கையில இடம் பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான இரண்டு பிரதான சந்தேகநபர்களைக் கைது செய்து, இப்போது பிணையிலும் அவதானிப்பிலும் விடுவித்து இருக்கின்றோம். ஒருவர் 60 வயதை எட்டியவர். அவர் 2001 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அரசியல் கூட்டம் ஒன்றை ஒட்டி இருவர் கொலையுண்ட சம்பவத்துடன் தொடர்பாகக் கைதானவர். மற்றவர் 48 வயதானவர். ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக கைதானவர். இவர்கள் இருவரும் தொடர்பான குற்றங்கள் குறித்து தகவல் தெரிந்தவர்கள், சாட்சிகள் எங்களுடன் தொடர்பு கொண்டு ஆதாரங்கள், சான்றுகள், சாட்சியங்களை வழங்கலாம்” என்ற சாரப்பட அந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. (அதன் விவரம் ஆங்கிலத்தில் இணைத்துள்ளேன். வாசித்தறியலாம்.)

அதில் குறிப்பிடப்பட்டுள்ள இருவரும் முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான மதனராஜன் மற்றும் நெப்போலியன் என்று நினைக்கிறேன். தீவுப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பிரசார நடவடிக்கைக்குச் சென்றவர்கள் மீது மண்டைதீவு, நரந்தனைப் பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர் என்பதும், அதையொட்டி நீதிமன்றத் தண்டனைத் தீர்ப்பு உள்ளது என்பதும் நினைவில் கொள்ளத்தக்கவை.

இந்தத் தண்டனைத் தீர்ப்பைக் காரணம் காட்டி இருவரையும் இலங்கைக்கு நாடு கடத்தக் கோரும் முயற்சிகளை சில சட்டத்தரப்புகள் சட்டமா அதிபர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு முன்னெடுக்கவும், இலங்கை நீதிமன்றத்தில் உரிய நடவடிக்கையை வலியுறுத்தும் மனுக்களை தேவைப்பட்டால் முன்நகர்த்தவும் திட்டமிடுகின்றன என்று தெரிகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து நேரடியாகத் தகவல் அறிந்தவர்கள், சாட்சிகள் இன்னும் இலங்கையில் இருக்கின்றனர்.

நேரடி விடயங்கள் தெரிந்தவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரதரப்புடன் தொடர்பு கொண்டால் இந்தச் சாட்டில் லண்டனில் போய் இறங்கி சாட்சியம் சொல்லவும் கூட வாய்ப்பு கிடைக்கலாம். அத்தகையோர் லண்டனில் உள்ள தங்கள் உறவுகள் மூலம் அங்குள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வது நல்லது.

விடயங்களை நேரடியாக அறிந்த – அவற்றுடன் சம்பந்தப்பட்ட – தரப்புகள் கூட இப்போது அமைதியாக நாட்டில் உள்ளன என்று தெரிகிறது. அத்தரப்புகள் கூட சத்தம் சந்தடியின்றி காரியமாற்றக்கூடிய – குற்றங்களுக்கு ஒத்துழைத்த தவறுகளுக்காக பிராயச் சித்தம் செய்யக் கூடிய – சூழலும் வாய்ப்பும் இப்போது வந்திருக்கிறது. இந்த அறிவிப்பு அவர்களுக்கும் சமர்ப்பணம்.

## Police appeal for information following second arrest in Sri Lanka war crimes investigation

4 June 2024

Tamil Translation
Sinhala Translation

Counter Terrorism detectives investigating allegations of war crimes linked to the Sri Lankan civil war in the early 2000s are appealing for anyone who might have information that could assist their investigation to contact police. The appeal comes after a second UK-based person was arrested as part of the ongoing Counter Terrorism Policing (CTP) investigation into this matter.

**Commander Dominic Murphy** said: "We know that these crimes have a lasting and significant impact on victims and witnesses and we've now made two arrests as part of this investigation. This is a sign of the progress being made by officers, who are looking into these extremely serious crimes.

"As in all serious cases, we need as much eye-witness testimony as possible to continue to build the case. We know that there are people with information about these incidents during the civil war in Sri Lanka who have not yet come forward. We would urge those people to contact police – we will support you, and your information will be treated in the strictest confidence."

Officers are eager to hear from anyone who may have first-hand information that could assist with the investigation – particularly those who lived in Sri Lanka in the early 2000s, or who had relatives or friends living in Sri Lanka at that time, and have since emigrated.

To provide information, email the War Crimes Team directly via: SO15Mailbox.WarCrimesTeam@met.police.uk.

Alternatively, call police in confidence on +44 (0)800 789 321.

A man in his 60s was arrested at an address in south London on 21 November 2023, on suspicion of an offence under Section 51 of the International Criminal Court Act, 2001. He was released from police custody and remains on bail.

This arrest relates to alleged crimes committed during a political rally in Jaffna in late 2001, during which two people were killed.

It followed an arrest in February 2022, when police arrested a 48-year-old man on suspicion of the same offence. This was in connection with the murder of journalist Mylvaganam Nimalarajan who was killed in 2000. That person was released under investigation, with enquiries ongoing.

Both incidents were part of a referral made in 2017 to the Counter Terrorism Policing War Crimes team, which is hosted by the Met's Counter Terrorism Command and the investigation remains ongoing.

# பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக ஜெனரல் சவேந்திரவுக்கு சேவை நீடிப்பு



பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக ஜெனரல் சவேந்திர சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்புதலின் பேரில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த நியமனம் ஜுன் 1 முதல் டிசம்பர் 31, 2024 வரை செல்லுபடியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூரிய ஆயுதங்களுடன் ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

ஆபத்தை ஏற்படுத்தும் கூரிய ஆயுதங்களுடன் யாழ்ப்பாணம் – சுன்னாகம், ஈவினைப் பகுதியில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணப் பிராந்திய விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரே குறித்த ஆயுதங்களை மீட்டதுடன் சந்தேக நபரையும் கைது செய்தனர்.

சுன்னாகம், ஈவினைப் பகுதியில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவருக்குச் சொந்தமான வீட்டிலே வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் இருக்கின்றன என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆபத்தை ஏற்படுத்தும் 8 கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சம்பவம் தொடர்பாக கைதான சந்தேக நபரிடம் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி நபர் பல்வேறுபட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கும் பொலிஸார், குறித்த விடயத்தில் வெளிநாட்டுப் பிரஜைக்கும் தொடர்புள்ளதா அல்லது வேறு நபர்களுக்குத் தொடர்புள்ளதா என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அபத்த நம்பிக்கை

மீண்டும் இந்தியப் பிரதமராக நாளை பதவியேற்கும் நரேந்திர மோடிக்கு இலங்கையிலிருந்தும் - தமிழர் பக்கத்தில் இருந்தும் - வாழ்த்து மழை குவிக்கின்றது.

எல்லோருக்கும் உச்சபட்சமாக 'உங்கள் வாழ்த்துக் கிடைத்தது. நன்றி!' - என்று ஒரு வரி பதில் சில சமயங்களில் இந்திய பிரதமரின் அலுவலகத்தில் இருந்து வரக்கூடும். அதுவும் கூட வந்த பின்னர்தான் சாத்தியம்.

அதற்கு மேல் இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியப் பிரதமரும் அவரது அலுவலகமும் சிரத்தையாக கவனமெடுப்பர் என்று நம்புவதற்கு இடம் இல்லை.

'தமிழர்களின் அரசியல் தீர்வு முயற்சிக்கு மோடியே தலைமை ஏற்க வேண்டும்' - என்று ஈ.பி.டி.பி. தன்பாட்டுக்கு அழைப்பு விடுக்கிறது.

வழக்கமாக ஒருவரைப் பாராட்டி புகழும் போது கொஞ்சம் கூடக் குறைய சேர்த்து, உயர்த்தி வைப்பதும் ஒரு பண்புதான். அப்படி கருதியோ என்னவோ யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதமர் மோடிக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தில் கொஞ்சம் கையாலும் மடியாலும் அள்ளிப் போட்டு புகழ்ந்து தள்ளி இருக்கின்றார்.

"இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமத்துவம், நீதி, பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை உறுதி செய்வது பற்றி நீங்கள் பல தடவைகள் திரும்பத் திரும்பக் கூறி வந்திருக்கிறீர்கள்" - என்று பெருமையுடன் சுட்டிக் காட்டி இருக்கிறார் விக்னேஸ்வரன்.

ஆனால், அப்படி நீதியரசர் கூறுவது உண்மைக்கு முற்றிலும் மாறானது.

தன்னுடைய இந்த வாழ்த்து வாசகத்தின் போக்கை ஒட்டி இன்னொரு விடயத்தையும் அதில் நீதியரசர் விக்னேஸ்வரன் நம்பிக்கை எதிர்பார்ப்போடு முன் வைத்திருக்கின்றார்.

"மூன்றாவது தடவையான உங்கள் பதவி காலத்தில் நீங்கள் கூறி வந்த அந்த விடயங்களுக்கு வடிவம் கொடுக்கும் விதத்தில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குக்கான உண்மையான அரசியல் அதிகாரப் பகிர்வை கூட்டாட்சி என்ற ஆட்சி முறையில் நீங்கள் உறுதிப்படுத்துவீர்கள் என நம்புகிறோம்" - என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, பாதுகாப்பு, கௌரவமான வாழ்வு, அர்த்தமுள்ள - நியாயமான - அதிகாரப்பகிர்வு என்றெல்லாம் இந்தியா பேசும். அது குறித்துக் குறிப்பிடும் முதல் இந்தியத் தலைவர் மோடி அல்லர். இந்திராகாந்தி காலத்திலிருந்து அனைத்து இந்தியத் தலைவர்களும் கிளிப்பிள்ளை மாதிரி வாய்ப்பேச்சில் கூறும் விடயங்கள்தான் அவை. செயலில் உருப்படியாக அவற்றில் எவையும் நடப்பவை அல்ல என்பது வேறுவிடயம்.

இவை எல்லாவற்றையும் தாண்டி 'தமிழரின் இறையாண்மை' பற்றி பிரதமர் மோடி பல தடவைகள் குறிப்பிட்டுள்ளார் என்ற சாரப்பட்ட நீதியரசர் விக்னேஸ்வரனின் கூற்று அதிகம் மிகைப் படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் காலத்திலிருந்தும், ஏன் அதற்கு முன்னரும், இந்தியாவுடன் ஈழதேசம் பிணக்குப்பட்டது இந்த விடயத்தில்தான். ஏன் அமைதிப்படை என்ற பெயரில் ஆக்கிரமிப்புக்காக வந்த இந்தியப் படையுடன் தமிழர் தேசத்தின் படையாக புலிகள் கரந்தடி யுத்தம் நடத்தியமை கூட அதனால் தான். 'தமிழர் தேசத்தின் இறையாண்மை' என்ற விடயத்தை ஒரு சொல்லுக்கு கூட - பேச்சுக்குக் கூட - மதிக்கவோ, கவனத்தில் எடுக்கவோ இந்தியா தயாரில்லை. அதுதான் உண்மை. அதுதான் கள யதார்த்தம். அதனால்தான் இந்தியா மீது தமிழர்களுக்கு அதிக வருத்தம். எரிச்சல். ஆதங்கம். மனக்கசப்பு.

அதுதான் ஈழத் தமிழர் தேசத்துக்கும் இந்திய மேலாதிக்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் அடிப்படை. பிரதான இழுபறி.

அத்தகைய இந்திய வல்லாதிக்கத்தின் பிரதமராக பத்து வருடங்கள் அதிகாரத்தில் இருந்தவர் - அடுத்த ஐந்து வருடங்களுக்கான பதவியை மீளவும் பொறுப்பேற்கப் போகின்றவர் - இலங்கைத் தமிழர்களின் இறையாண்மையையும் உறுதி செய்வார் என்று சாரப்பட அடிக்கடி கருத்து வெளியிட்டார் என்றும், அதன் அடிப்படையில் உண்மையான அரசியல் அதிகாரப்பகிர்வைகூட்டாட்சிமுறையில் உறுதிப்படுத்துவார் என்று நம்புகின்றோம் என்றும் கூறுவதும் பெரும் அபத்தம்.

வாழ்த்துச்செய்தி அனுப்புங்கள். அதில் நம்பிக்கைகள் - எதிர்பார்ப்புகளை - முழு மனதோடு குறிப்பிடுங்கள். தப்பில்லை. ஆனால் அதற்காக அபத்தங்களை வாழ்த்துக்களாக்குவதில் அர்த்தமில்லை. அர்த்தமுள்ள சொற்களை அர்த்தமற்ற விடயத்திற்கு வீணாக்குவதுதான் விளைவாகும்.

# இந்தியாவில் 3ஆவது முறையாக ஆட்சி அமைக்க குடியரசுத் தலைவரிடம் அனுமதி கோரினார் மோடி

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை பிரதமர் நரேந்திர மோடி நேற்று சந்தித்து பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு கடிதத்தை வழங்கி ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதையடுத்து, ஆட்சி அமைக்க அவருக்கு குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்தார். அதன்பின் பேசிய பிரதமர் மோடி, “நாட்டுக்குச் சேவை செய்ய தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மக்கள் மூன்றாவது முறையாக வாய்ப்பு அளித்துள்ளார்கள்” – என்றார்.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றதை அடுத்து, அக்கூட்டணியின் கூட்டம் டில்லியில் உள்ள பழைய நாடாளுமன்ற கட்டடத்தின் மைய அரங்கில் நடைபெற்றது. இதில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் முக்கிய தலைவர்களான சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார் உள்பட அனைத்து தலைவர்களும், புதிதாக எம்.பிக்களாக தேர்தெடுக்கப்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக நரேந்திர மோடியின் பெயரை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்மொழிந்தார். தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அதனை வழிமொழிந்தார். இதன்பின் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவராக பேசி பிரதமராக மோடியை தேர்வு செய்வதற்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். தொடர்ந்து மக்களவை பா.ஜ.க. தலைவராகவும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்றக் கட்சித் தலைவராகவும் நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

என்.டிஏ-வின் இந்த முக்கிய முடிவை அடுத்து, பா.ஜ.க. மூத்த தலைவரான எல்.கே. அத்வானியை டில்லியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து மலர்க்கொத்து கொடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

இதனையடுத்து, பா.ஜ.கவின் மற்றொரு மூத்த தலைவரான முரளி மனோகர் ஜோஷியை பிரதமர் மோடி அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது, பிரதமர் மோடிக்கு சால்வை அணிவித்து முரளி மனோகர் ஜோஷி வாழ்த்து தெரிவித்தார்.



இந்த நிலையில், குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு கடிதத்தை குடியரசுத் தலைவருக்கு அளித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். இதன் தொடர்ச்சியாக, ஆட்சி அமைக்க குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக குடியரசுத் தலைவர் மாளிகையில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி,

“சிறிது நேரம் முன்புதான் குடியரசுத் தலைவர் என்னை அழைத்தார். பிரதமராகப் பணிபுரியச் சொன்னார். பதவியேற்பு விழா குறித்து கேட்டார். எதிர்வரும் 9 ஆம் திகதி மாலையில் பதவியேற்பு விழா நடைபெறுவது எங்களுக்கு உகந்ததாக இருக்கும் என்று குடியரசுத் தலைவரிடம் தெரிவித்துள்ளேன். இனி, மற்ற விஷயங்களை குடியரசுத் தலைவர் மாளிகை மேற்கொள்ளும். அதற்குள் நாங்கள் அமைச்சர்கள் பட்டியலை குடியரசுத் தலைவரிடம் ஒப்படைப்போம்.

நாட்டுக்குச் சேவை செய்ய தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மக்கள் மூன்றாவது முறையாக வாய்ப்பு அளித்துள்ளார்கள். கடந்த 10 ஆண்டுகளில் நாடு வேகமாக முன்னேறியது. ஒவ்வொரு துறையிலும் மாற்றத்தை பார்க்க முடிகிறது. 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமையான தருணம்.”– என்றார்.

# மோடியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த்



மூன்றாவது தடவையாக இந்தியாவின் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட நரேந்திர மோடிக்கு இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மோடியை ராம் நாத் கோவிந்த் வாழ்த்தியுள்ளார்.

இனையடுத்து, ராம் நாத் கோவிந்த் தனது முகப்புத்தக பதிவில், “நரேந்திர மோடி, உங்கள் தலைமையின் மீது இந்தியர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை கடந்த 60 ஆண்டுகளில் இல்லாது இந்த மூன்றாவது ஆணையில் பிரதிபலிக்கிறது.

எனவே, பாரதத்தின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தொடர்ந்து பணியாற்றும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.” என குறிப்பிட்டுள்ளார்.





# பள்ளிவாசல் தாக்கப்பட்ட விவகாரம்: இஸ்ரேலுக்கு ஓமன் கடும் கண்டனம்

இஸ்ரேல் இராணுவம் ஜெருசலேம் நகரில் உள்ள அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் தாக்குதல் நடத்தியமைக்கு எதிராக ஓமன் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஓமன் வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஜெருசலேம் நகரில் உள்ள அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் இஸ்ரேல் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இச் செயல் இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் செயல்கள் அனைத்தும் சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது. மேலும் இத்தகைய அத்துமீறல்களுக்கு ஓமன் அரசு கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரச கடமைகளில் இருந்து விலகுகிறார் இளவரசி கேத்



பிரித்தானிய இளவரசி கேத் மிடில்டன் அரச கடமைகளில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

42 வயதான இளவரசி கேத் மிடில்டனுக்கு கடந்த ஜனவரி மாதம் வயிற்றுப் பகுதியில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அதன் பிறகு அவர் பொது வெளியில் தோன்றுவதனைத் தவிர்த்து வந்தார். இதனால் அவரது உடல்நிலை குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் அவர் காணொளியொன்றை வெளியிட்டு, தனக்கு புற்றுநோய் பாதிப்பு இருப்பதை உறுதி செய்திருந்தார்.

இந்நிலையில், தற்போது இளவரசி கேத் மிடில்டன் அரச கடமைகளில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# உக்ரைனுக்கு எதிரான போரில் பிரித்தானியா நேரடி தலையீடு

## பழிவாங்குவது உறுதி என்கிறார் புடின்



உக்ரைனுக்கு எதிரான தனது போரில் பிரித்தானியா நேரடியாக தலையிட்டுள்ளதாக குற்றஞ்சாட்டிய விளாடிமிர் புடின், பழிவாங்குவது உறுதி என தெரிவித்துள்ளார்.

மேலும், பிரித்தானிய ஆயுதப் படைகள் ரஷ்ய இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளைக் குறிவைப்பதாகவும், சர்வதேச பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலின் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

"ரஷ்யாவின் நிலைகளை குறிவைக்க அமெரிக்காவும் பிரான்சும் தனது ஆயுதப் படைகளைப் பயன்படுத்துகின்றது. ரஷ்யாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு அச்சுறுத்தலுக்கு இலக்கானால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவேன்.

உக்ரைன் வீரர்கள் தொடர்பில் எமக்கு தெரியும். தொலைதூர ஏவுகணைகளை பயன்படுத்தி அவர்களால் தனித்து தாக்குதல் தொடுக்க முடியாது. அதற்கான அடுத்ததடுத்த நிலைகள் என்ன என்பது தமக்கு தெரியும்.

இதன் பின்னணியில் கண்டிப்பாக மேற்கத்திய நாடுகளின் ஈடுபாடு பதிவாகியுள்ளது. இந்த ஆயுதங்களை வழங்கியவர்களால் மட்டுமே, அதற்கான வழி முறைகளை உருவாக்க முடியும்.

ATACMS என்றால் அமெரிக்கா அதில் ஈடுபட்டிருக்கும். Storm Shadow என்றால் அதில் பிரித்தானியா ஈடுபட்டிருக்கும்." என்று தெரிவித்துள்ளார்.




**1. உரலார் கேள்வி: தி.மு.க.வினரின் 40க்கு 40 சாதனை வெற்றி பற்றி என்ன நினைக் கிறீர்கள்?**



**உலக்கையார் பதில்:** பாராட்டத் தகுந்த வெற்றி தான் என்பதில் ஐயமில்லை. அதே நேரத்தில் இந்த வெற்றிக்கான முழு உரிமையும் தற்போதைய கட்சியின் நிர்வாகிகளை மட்டுமே சாரும் என்று சொல்லமுடியாது. அவர்களைக் கடந்தும் இவ் வெற்றிக்கான காரணங்கள் சில இருக்கவே செய்கின்றன.

✯ 50 ஆண்டுகளுக்குமேல் முன்னைய கட்சியின் தலைவர்கள் ஏற்படுத்தி வைத்திருந்த நன் மதிப்பும், வழிகாட்டலும்.

✯ பிரிந்து நின்ற எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மையால் வந்த சாதகநிலை.

✯ அண்ணாமலையார், சீமானைத் தவிர ஆளுமைமிக்க தலைவர்கள் பிற கட்சிகளில் இல்லாமல் போனமை.

✯ மேற்சொன்ன இருவரில், அண்ணா மலையின்மேல் பூசப்பட்டிருக்கும் 'சங்கி'ச்சாயமும், சீமானின் கட்சி அவர் கைக்குள் மட்டும் இருப்பதும் விரிந்த வெற்றிகளை அவர்களுக்குத் தேடித் தராமல் போனது. இதுவும் இவர்களுக்குச் சாதகமாயிற்று.

✯ முக்கியமாக இவர்களின் கையிலிருந்த பணபலம்.

– இப்படிப் பல காரணங்கள் இவர்களின் நாற்பதுக்கு நாற்பது வெற்றியின் பின்னால் இருப்பதை யாராலும் மறுக்க முடியாது என்றே நினைக்கிறேன்.

**சல்லடையார் சலிப்பு:**
**'சிறப்பு!'**

✢✢✢✢✢✢✢✢✢✢

**2. உரலார் கேள்வி: அண்ணாமலையாரின் முயற்சியெல்லாம் 'விழலுக்கு இறைத்த நீராய்ப் போயிற்றே'. அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில்:** அண்ணாமலையார் ஓய்வின்றிச் செய்த முயற்சிகளுக்கு ஓரிரு சீற்றுகளாவது கிடைத்திருக்கலாம்! கிடைக்காமல் போனது அவரது தோல்வியல்ல. ஆளுமைமிக்க, நேர்மையான, தேசிய உணர்வு உள்ள ஒரு தலைவரை இனங்காணாமல் போன தமிழ்நாட்டு மக்களின் தோல்விதான் என்றே கருதுகின்றேன்.

அண்ணாமலையாரும், பெரும்பாலும் சீமானைப் போலவே தனிமரத் தோப்பாகத்தான் செயலாற்றினார். உட்கட்சிக்குள்ளேயே அவரது ஆளுமைமிக்க தலைமைத்துவத்திற்கு முழுமையான ஆதரவு இல்லை என்பதற்கு, அ.தி.மு.க.வுடன் இணைந்திருந்தால் 20, 30 சீற்றுக்களையாவது வென்றிருக்கலாம் என்ற அ.தி.மு.க. உறுப்பினரின் கருத்தை, தேர்தலின்பின் பகிரங்கமாய் ஆதரித்த பா.ஜ.கவின் மூத்த உறுப் பினரான தமிழிசை சௌந்தரராஜனின் செயலே சான்று பகர்கின்றது.



ஆனாலும், அண்ணாமலையார் முழுத் தோல்வி அடைந்தார் என்று சொல்ல மாட்டேன். இரண்டு சதவீதமாய் இருந்த பா.ஜ.க.வின் வாக்கு வங்கியை மிகக் குறுகிய காலத்தில் 11 சதவீதமாய் உயர்த்தியிருப்பது என்பது சாதாரண செயல் இல்லை. அந்த விதத்தில் அண்ணாமலையார் வெற்றி பெற்றிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

**சல்லடையார் சலிப்பு:**
**'முடிவை விட முயற்சிதான் முக்கியமானதுங்கோ!'**

✢✢✢✢✢✢✢✢✢✢

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**3. உரலார் கேள்வி: உங்கள் அண்ணாமலையார் வீணாக அ.தி.மு.க.வைப் பகைத்துப் பிரிந்ததால்தான் தி.மு.க.விற்கு 40க்கு 40 வெற்றி கிடைத்ததாய்ச் சொல்கிறார்கள். அறிவாளியான அவரால் இப்படியான ஒரு நிலை வரும் என்று ஏன் ஊகிக்க முடியாமல் போயிற்று?**

**உலக்கையார் பதில்:**

அரசியல் அனுபவமில்லாத சாதாரண ஒருவரால் கூட இந்த உண்மையை ஊகித்திருக்க முடியும். அப்படியிருக்க, அண்ணாமலையார் அந்த இடத்தில் சறுக்கியிருப்பாரா எனச் சிந்திக்காமல் பலரும் பேசி வருகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை ஆழ்ந்த திட்டமிடுதலுடன்தான் அண்ணாமலையார் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார் என்று நினைக்கிறேன். ஒரு சீற்றிலும் வெற்றி பெற முடியாமல் போனது என்ற தோல்வியைத் தவிர, குறித்த சில காலத்திற்குள் பதினொரு சதவீத வாக்காளர்களைப் பெற வைத்திருப்பது அவரது சாதனைதான்.

கூட்டுச் சேர்ந்திருந்தால் இந்த வளர்ச்சி பா.ஜ.க.வுக்கு கிடைத்திருக்காது. பல ஆண்டுகளாகப் பல ஆளுமைமிக்க தலைவர்களைத் தம்மகத்தே கொண்டிருந்த கட்சியினரும், பல காலம் ஆட்சி நிர்வாகத்தைத் தம்மகத்தே வைத்திருந்தவர்களும், தற்போது வைத்திருப்பவர்களும் 20 இலிருந்து 30, 35 சதவீத வாக்காளர்களை மட்டும் தமக்காக்கி வைத்திருக்க, குறித்த சில காலத்திற்குள் தனி ஒருவராய் நின்று 2 சதவீத வாக்காளர்களை 11 சதவீத வாக்காளர்களாக உயர்த்தியிருப்பது வியக்கத்தக்க ஒன்றேயாகும். இதனை, அண்ணாமலையாரைக் குற்றம் சாட்டுகிறவர்கள் ஏனோ நினைக்கத் தவறுகிறார்கள்.

பெற்ற வாக்குவீத அடிப்படையில் தேர்தல் சீற்றுக்கள் ஒதுக்கப்பட வேண்டுமானால் முன்னைய நிலையில் பா.ஜ.க.வுக்குப் பெருங்கட்சிகள் ஓரிரு சீற்றுகளைக் கூட ஒதுக்க முன்வந்திருக்கமாட்டார்கள். இனிவரும் தேர்தல்களில் மற்றக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தாலும், பெற்ற வாக்குகளின் சதவீத அடிப்படையில் துணிவாக பா.ஜ.க. சீற்றுக்களை உரிமையுடன் பெற்றுக் கொள்ளலாம். அதுமட்டுமன்றி, குறிப்பிட்ட சில காலங்களில் கட்சிக்காக 11 சதவீத வாக்காளர்களை உருவாக்கிய அவருக்கு மிக விரைவாக அந்த சதவீதத்தினை இன்னும் வேகமாக வளர்க்க அதிக நாள்கள் செல்லாது என்பது உறுதி.

இதையெல்லாம் நினைத்துப் பார்த்தால் அண்ணாமலையின் முடிவில் தவறு இருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை.

**சல்லடையார் சலிப்பு:**

**'தோல்வி நிலை என நினைத்தால்...'**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி: இராமரை வைத்துப் பா.ஜ.க. தீட்டிய திட்டம் பயனற்றுப் போய் விட்டதே. இராமர் கோவில் கட்டிய தொகுதியிற் கூட பா.ஜ.க. உறுப்பினர் தோற்றிருக்கிறார். பா.ஜ.க.வின் இந்தத் தோல்வியை எதிர்பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில்:** தோல்வியையும், வெற்றியையும் எதிர்பார்க்க நான் என்ன பா.ஜ.க. கட்சிக்காரனா? இராமர் கோயில் கட்டுவதென்பது பக்தியால் செய்யப்படவேண்டிய ஒரு காரியம். அதனை அரசியலுக்கான கருவியாய்ப் பயன்படுத்த யார் நினைத்திருந்தாலும் அந்த நினைப்புத் தவறுதான். இராமன் அறத்தின் நாயகன். அவனுக்குக் கோயில் கட்டுவதன்மூலம் அறம் வளர்க்க முயற்சி செய்ய வேண்டுமே தவிர, அரசியல் வளர்க்க முயற்சி செய்யக்கூடாது.

இந்திய வாக்காளர்கள் வித்தியாசமானவர்கள். தேசிய உணர்விலும், ஜனநாயகப் பற்றுதலிலும் அவர்கள் எப்போதும் தெளிவாய் இருக்கிறார்கள். முன்பொருமுறை அவசரகாலச் சட்டத்தை இந்திராகாந்தி அம்மையார் பிறப்பித்தபோது, இந்தியாவின் நிர்வாக ஒழுங்கு மிகச் சிறப்புற்றது. ஆனாலும் அம்மையாரின் அந்த முடிவு



ஜனநாயகத்திற்குப் புறம்பானது என நினைந்து, அடுத்த தேர்தலில் அவரது கட்சியைத் தோற்கடித்து, அவரது சீற்றிலேயே அவரையும் தோற்கடித்தார்கள்.

பின்னர், மூத்த தலைவர்களால் உருவாக்கப்பட்ட ஜனதா கட்சி, பதவியேற்ற ஒருசில ஆண்டுகளுக்குள்ளேயே குளறுபடிகளைச் செய்ய, அதே வாக்காளர்கள் அவர்களைத் தோற்கடித்து, மீண்டும் இந்திரா காந்தியை ஆட்சியில் அமர்த்தினார்கள்.

இந்திய வாக்காளர்களில் பெரும்பான்மையானவர்கள் அறிவாளிகள் அல்லர். ஆனால் அவர்கள் நல்ல உணர்வாளர்கள். அதனால்தான் அவர்களின் தேர்தல் தீர்ப்புக்கள் பெரும்பாலும் சரியாகவே அமைந்து போகின்றன.

இம்முறை தேர்தல் தீர்ப்பினைக் கண்டு வெறுப்புறாமல், பாரதிய ஜனதாக் கட்சியினர் அதுபற்றி ஆழமாக ஆராய வேண்டும். பாராபட்சமின்றி ஆராய்ந்து நல்ல முடிவினைக் காண்பார்களாயின் இம்முறை நழுவவிட்ட பெரிய வெற்றி, நிச்சயம் அடுத்தமுறை அவர்களுக்குக் கிடைக்கலாம்.

**சல்லடையார் சலிப்பு:**

**'காசில் கொற்றத்து இராமன்' எனக் கம்பர் சும்மாவா சொன்னார்?**

✦✦✦✦✦✦✦✦✦✦

**5. உரலார் கேள்வி: நம்மவர்கள் நாடாளுமன்றத்தில் வெறும் வாய்ச்சண்டையோடு நிற்காமல், வெட்கமில்லாமல் கைச் சண்டையும் போடுகிறார்களே? கோர்ட், சூட் என எல்லாவற்றிலும் ஆங்கிலேயரைப் பின்பற்றுகிறவர்கள், எப்போதான் ஆங்கிலேயர்களிடமிருந்து நாகரீகத்தைக் கற்றுக் கொள்ளப் போகிறார்கள்?**

தொடர்ச்சி▼

**தொடர்ச்சி▲**

**உலக்கையார் பதில்:** நாடாளுமன்றத்தில் நடக்கும் கைச்சண்டையையும், வாய்ச்சண்டையையும் விட்டுத் தள்ளுங்கள். மக்களை ஏமாற்றி வெளியே ஒருவிதமாகவும், உள்ளே வேறுவிதமாகவும் நின்று, இவர்கள் பிடிக்கும் பொய்ச் சண்டையோடு ஒப்பிட்டால் அவையெல்லாம் வெறும் 'ஜுஜுபி'தான்.

ஆங்கிலேயர்கள் எல்லோரும் உயர் நாகரிகத்தைப் பேணுகிறவர்கள் என நினைக்கும் உங்களது நினைப்பு தவறானது. அவர்களும் இத்தகைய அநாகரீகங்களில் ஈடுபட்டுத்தான் வருகிறார்கள். 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 'ஒஸ்கார்' விருதளிக்கும் வைபவத்தில் விருது பெறவென வில் ஸ்மித் எனும் புகழ்பெற்ற நடிகர் தனது மனைவியுடன் வந்திருந்தார். அன்று மேடையில் நிகழ்ச்சிகளை தொகுத்தளித்த கிறிஸ் றொக் எனும் புகழ் பெற்ற அறிவிப்பாளர் வில் ஸ்மிதின் மனைவியின் உடைபற்றி மேடையில் கிண்டல் அடிக்க, ஆத்திரப்பட்ட வில் ஸ்மித் அத்தனை பேர் முன்னாலேயும் எழுந்து சென்று அந்த அறிவிப்பாளரின் கன்னத்தில் அறைந்து தள்ளினார். அக்காட்சி உலகெங்கும் ஒளிபரப்பப்பட்டது.

நாகரிகம் மனிதர்களின் பண்பாட்டைச் சார்ந்தது. அந்த விடயத்தில் நீண்ட வரலாறு உடைய தமிழர்கள்தான் உலகத்திற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

**சல்லடையார் சலிப்பு:**
**'வீட்டுக்கு வீடு வாசல்படிதானுங்கோ...'**

✦✦✦✦✦✦✦✦✦✦

**6. உரலார் கேள்வி: ஜனாதிபதித் தேர்தல் நடக்குமென்று நம்புகிறீர்களா?**

**உலக்கையார் பதில்:** நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்து விடும். பொறுத்திருந்து பார்ப்போம்.

**சல்லடையார் சலிப்பு:**
**'நம்ம பாட்டையெல்லாம் வாரிதியார் எடுத்துவிட்டால் நாங்க என்ன செய்வதாம்?'**

✦✦✦✦✦✦✦✦✦✦

# களப்பு அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஏன் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை?

## நாரா அதிகாரிகளிடம் அமைச்சர் டக்ளஸ் கேள்வி



நாடெங்குமுள்ள களப்புகளின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியை உரிய முறையில் பயன்படுத்தாமை தொடர்பாக தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (நாரா) அதிகாரிகளிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினார்.

2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரைக்குமான நாராவின் நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்ட முறைமை தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போதே அமைச்சர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் மாகாணங்களிலுள்ள நந்திக் கடல், சாலை, மட்டக்களப்பு வாவி நாயாறு, நாசிக்குடா களப்புளின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது தொடர்பாகவும் அவற்றின் முன்னேற்றம் எந்த நிலையில் உள்ளது என்பது பற்றியும் அமைச்சர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதன் போது நாரா அதிகாரிகள் களப்பு அகழ்தல், பயிற்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிதி செலவழிக்கப்பட்ட விதம் தொடர்பாக விளக்கமளித்தனர். இருப்பினும் சில முரண்பாடுகள் இருக்கின்றன எனவும் களப்பு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக பயன்படுத்தப்படவில்லை எனும் முறைப்பாடுகள் இருப்பதாகவும் அமைச்சர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குரிய விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சர் பிறிதொரு தினத்தில் இவ்விடயம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்படுமென கூறினார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் செல்வி நயனா குமாரி சோமரத்ன, இராஜாங்க அமைச்சின் செலாளர் திருமதி கோகுல, கடற்றொழில் திணைக்களத்தின பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, நாரா பணிப்பாளர் நாயகம் கலாநிதி அருளானந்தன் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பு மாவட்ட புதிய செயலக வளாகத்தில் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நாளை

## இன்று எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு

(பழுவூரான்)

மட்டக்களப்பு திராய்மடுவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலக வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய ஆவர்த்தன அஸ்டபந்தன ஏக குண்ட பக்ஷ நூதன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை மிக விமரிசையாக இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை தற்போதுள்ள மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து புதிய ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ள விநாயகப் பெருமானின் விக்கிரகம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு புதிய மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தை சென்றடைந்ததும் கிரியைகள் ஆரம்பமாகின. ஆச்சார்யவர்ணம், விநாயகர் வழிபாடு, மகா சங்கல்பம், புண்ணியாக வாசனம், அனுஞ்ஞை, திரவிய பாக திரவிய பூஜை, பேரி தாடணம், நந்திக்கொடி ஏற்றம், மகா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சூரியாக்கினி, சங்கீரணம், அதிவாச கிரிகைகள் என்பன தொடர்ந்து நடைபெற்றன.

தொடர்ந்து இரண்டாம் நாள் இன்றய் சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாடும், புண்ணியாக வாசனம், அதனைத் தொடர்ந்து யாக பூசை, விசேட திரவிய ஹோமம், தீபாராதனை, திருமுறைப் பாராயணம் மற்றும் காலைப் பூசை என்பன இடம்பெறவுள்ளன. இன்றைய தினம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை விநாயகப் பெருமானுக்கு எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நாலை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், யாகசாலை பிரவேசம், யாக பூசை ஹோமம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை, யாத்திரா தானம், தூபி அபிஷேகம் என்பன இடம்பெற்று காலை 10.38 மணி முதல் 11.26 மணி வரையுள்ள சுபமுகுர்த்த வேளையில் மகா குப்பாபிஷேகம், தச மங்கள தர்சனம், மகாபிஷேகம், ஆச்சாரிய சம்பாவனை என்பன இடம்பெற்று அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தின் தலைவி திருமதி. ஜஸ்ரினா முரளிதரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கே.குணநாயகத்தின் ஏற்பாட்டில் ஆலய நிருவாக சபையினரின் ஒத்துழைப்புடன், கும்பாபிஷேக நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

கிரியா காலத்தில் பிரதிஸ்டா பிரதம குருவாக கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவரும், ஆரையம்பதி கந்த சுவாமி பேராலயத்தின் பிரதம குருவுமாகிய அகோரசிவாச்சாரியார் கிரியா கலாநிதி சிவஸ்ரீ.கணேசலோகநாதக் குருக்கள் தலைமையில் மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.உத்தம ஜெகதீஸ்வர குருக்கள் உள்ளிட்ட சிறப்புக் குருமார்களினால் கும்பாபிஷேகம் மற்றும் கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து மண்டலாபிஷேகப் பூசைகள் என்பன நடைபெற்று, எதிர்வரும் 20 ஆம் திகதி சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.





















# மற்றொரு மருந்துக் கொள்வனவு மோசடி பற்றி நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார் சஜித்

அவசர கொள்முதல் திட்டத்தின் கீழ் கூடிய விலைக்கு மற்றுமொரு தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பெருந்தொகைப் பணம் சூறையாடப்பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அது குறித்து அரசாங்கத்திடம் விளக்கம் கோரியிருக்கின்றார்.

பாக்டீரியா தொற்றுகளுக்குப் பயன்படுத்தப்படும் Meropenem என்ற தடுப்பூசி அவசரகாலத்தில் மருத்துவமனை கட்டமைப்பிலும் மருத்துவ விநியோக கட்டமைப்பிலும் கையிருப்பில் இருக்க வேண்டும். அவரச கொள்முதல் முறையின் மூலம் 450,000 தடுப்பூசி குப்பிகர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் நாட்டுக்கு 36 கோடி 89 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஒரு குப்பி ரூ.1075.68 க்கு கிடைத்தும், ரூ.1895.50 க்கு இதைக் கொள்வனவு செய்துள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

488,590 தடுப்பூசிகள் கையிருப்பில் இருக்கின்றன எனக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் ஏன் அவசர கொள்முதல் செய்யப்பட்டது என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். இதனால் நாடு நட்டத்தை சந்தித்துள்ளது. எனவே இந்த அவசர கொள்முதல் தொடர்பாக முறையான அறிக்கையை வெளியிட்டு விளக்கம் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் இருந்து பதிவுச் சான்றிதழைப் பெற்று, குறுகிய காலத்துக்குள் இந்த விநியோகஸ்தர் அவசர கொள்முதல் மூலம் இந்த மோசடியை செய்திருக்கின்றமையால், இது தொடர்பாக அறிக்கையொன்றைச் சபையில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

# போக்குவரத்துத் துறை மேம்பாடு குறித்து வடக்கு ஆளுநர் செயலகத்தில் ஆராய்வு

கடல்வழிப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், வட மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகள், புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள், எதிர்கால திட்ட முன்மொழிவுகள், ரயில் போக்குவரத்து, கடல்வழி போக்குவரத்துச் செயற்பாடுகள், வடக்கு மாகாண போக்குவரத்துத் துறையில் காணப்படும் சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

தீவுகளுக்கான பயணிகள் போக்குவரத்திற்குரிய படகுச் சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும், இறங்குத்துறைகள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது கூறினார். பஸ் பயணிகள் நாளாந்தம் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் இந்த கூட்டத்தின் போது ஆளுநர் எடுத்துரைத்தார். ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் அரச மற்றும் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆளுநர் கூறியதற்கு அமைய அதற்கான உரிய செயற்பாடுகளை அமுல்படுத்துமாறு மத்திய அமைச்சின் துறைசார் அதிகாரியால், மாகாண அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கான சமிக்ஞை கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், யாழ் மற்றும் காங்கேசன்துறை ரயில் நிலையங்களுக்கு அருகில் போக்குவரத்து முனையங்களை நிறுவுதல் போன்ற விடயங்கள் குறித்தும் ஆளுநர் தனது ஆலோசனைகளை முன்வைத்தார். வடக்கு மாகாணத்திலுள்ள ரயில் நிலையங்களுக்கு அருகில் காணப்படும் பொருள் களஞ்சிய சாலைகளை உரியவாறு பயன்படுத்த வேண்டும் எனவும், பயன்பாடு குறைந்து காணப்படும் களஞ்சியசாலைகளை தனியாரிடம் வழங்கி அவற்றை மேம்படுத்த வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதனூடாக பொருளாதார அபிவிருத்திகளை அடைய முடியும் எனவும், சுற்றுலாத்துறைசார் விடயங்களை மையப்படுத்தி போக்குவரத்து சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் கூறினார்.

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துத் துறையை விஸ்தரிப்பது தொடர்பில் கேட்டறிந்து கொண்ட மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், கடழ்வழி போக்குவரத்தின் அவசியம் மற்றும் தேவை தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

அத்துடன் எதிர்வரும் ஒன்றரை மாதங்களுக்குள் தண்டவாளப் புனரமைப்பு நிறைவு செய்யப்பட்டு, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான நேரடி ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்படும் எனவும் போக்குவரத்துத் துறையை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
22 - 12 - 1944



**மறைவு**
06 - 06 - 2024

# முத்துக்கண்ணு செல்வராஜா தேவர்

இறக்குவானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. M. செல்வராஜா தேவர் அவர்கள் 6.6.2024 வியாழக்கிழமையன்று சிவப்பதமடைந்தார்.

அன்னார் அமரர் முத்துக்கண்ணு தேவர், அமரர் பாலாமணி அம்மாளின் அன்புப் புதல்வனும், அமரர் தனலட்சுமியின் அன்பு கணவரும், கருணாகரன், சுபதர்ஷினி, தனராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜா, ராஜபிரஷாந்தினி, மாளவிகா ஆகியோரின் மாமனாரும் Harithra, அக்ஷயன், யாதர்ஷ் ஆகியோரின் தாத்தாவும், அமரர் வெள்ளதாயி, அமரர் பால்சாமி தேவர், தேவராஜா தேவர், அமரர் சகுந்தலாதேவி, சந்திரமோகன் தேவர், பாக்கியலக்ஷ்மி, இந்திராணி, அமரர் ராசதேவி, ராசதேவன் தேவர், பவளராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (8.6.2024) சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் LANKA FLORISTS (Punchi Borella) வைக்கப்பட்டு நாளை (9.6.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். பின்னர் அவரின் பூதவுடல் 2 மணியளவில் Borella பொது மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**கருணாகரன் (கண்ணா),**
**சுபதர்ஷினி (சுபா), தனராஜ்**
0773242032





# இந்து சமயத் தலைவர்களை நேற்று நல்லூரில் சந்தித்த கனடாத் தூதர்

(ந.லோகதயாளன்)

கனடா துணைத் தூதரகத்தை வடக்கில் நிறுவி, மக்களுக்கு உதவவேண்டும் என நல்லை ஆதீனம் மற்றும் ஆறு. திருமுருகன் ஆகியோர் கனேடியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனடா நாட்டுத்தூதுவர் இந்துசமயத் தலைவர்களை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதன்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோருடன் நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

நல்லை ஆதீன முதல்வர் கனடா நாட்டில் வாழும் எம்மக்களைக் கௌரவமாக அங்கு வழிநடத்துவதற்கு நன்றி கூறியமையோடு, இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கனடா நாடு இலங்கை அரசுடன் பேச வேண்டும் என்பதனை வலியுறுத்தினர்.

கனடா துணைத்தூதரகத்தை வடக்கில் நிறுவி, மக்களுக்கு உதவவேண்டும் எனவும், கனடாத் தூதரக விசா அலுவலகம் வடக்குப் பகுதியில அமைய வேண்டிய அவசியத்தையும் விளக்கினர். தொடர்ந்து போரில் இறந்தவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் வழிபாடு செய்யும் உரிமையையும் எடுத்துரைத்தனர்.





# மரண வீட்டிற்குச் சென்று திரும்பியோரின் கார் வழியில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்து!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹட்டன்– வனராஜா கல்பள்ளி பகுதியில் கார் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்ததில் மூன்றரை வயது குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்து டிக்கோயா– கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

சாமிமலை பகுதியில் மரண வீடொன்றுக்கு வந்த குடும்பம், கொழும்பு நோக்கித் திரும்பிச் செல்லும் போது கார் வீதியை விட்டு விலகி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மத்திய மாகாணத்தில் நிலவும் பனிமூட்டம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனவும், கார் இன்னும் சற்றுக் குடைசாய்ந்திருந்தால் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் விழுந்து நிலமை இன்னும் மோசமடைந்திருக்கலாம் எனவும், குடும்பத்தினர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் எனவும் ஹட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# தமிழரின் அரசியல் தீர்வு முயற்சிக்கு மோடியே தலைமையேற்க வேண்டும்

## ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் ரங்கேஸ்வரன் கருத்து

பாரத தேசத்தை மூன்றாவது முறையாக பொறுப்பேற்கும் பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகாண முழுமையாக தலைமையேற்றுப் பங்களிக்க வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை மறுக்கப்பட்டதால் அகிம்சை போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டமாக வலுப்பெற்று பின்னர் இந்திய – இலங்கை ஒப்பந்தத்துடன் இலங்கை தமிழர்களுக்கான ஓர் அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கான மாகாண ஆட்சி முறைமை கொண்டு வரப்பட்டதுடன் ஆயுதப்போராட்டமும் முடிவுக்கு வந்தது.

இருந்தும் துரதிஷ்டமாக வன்முறைகள் தொடர்ந்தகொண்டிருந்தன. பின்னர் பன்னாட்டு சக்திகள் நாட்டின் உள் விவகாரங்களில் மத்தியஸ்தம் வகித்தும் பேரழிவுடன் வன்முறை அஸ்தமித்துப் போனது.

தமிழர்களுடைய அரசியல் உரிமை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வம் எட்டப்படவில்லை. ஆயினும் இலங்கை –




இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபை ஆட்சிமுறையே மிஞ்சியது. இருந்தும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசினால் மீளப் பெறப்பட்ட நிலையிலும், இணைந்த வடக்கு – கிழக்கை ஜே.வி.பி.யினர் தமிழர்கள் ஒரு நிலத் தொடர் அலகாக வாழ்வதை தடுப்பதற்காக உயர் நீதிமன்றம் சென்று வழக்குத் தாக்கல் செய்து பின் இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டன.

அவ்வாறாக இருந்த சூழலில் ஜனநாயக முறைப்படி மாகாண சபை தேர்தல்களும் நடத்தப்பட்டு ஆட்சி அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்ந்தும் தீர்க்கமான முடிவின்றியே இருந்துவருகின்றது.

இந்த சூழ்நிலையில் மூன்றாவது முறையாக பாரத தேசத்தை பொறுப்பேற்கும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான நரரேந்திர மோடி அரசு இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் தலைமையேற்று முழுமையாகப் பங்காற்ற வேண்டும்.

இலங்கை தொடர்பான அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு நலன் சார்ந்து இந்தியாவே இருந்து வருகின்றது. இருப்பினும் புரையோடிப்போயுள்ள தமிழர்களது அரசியல் தீர்வு விடயத்தில் 1983 இனக்கலவரம் முதல் இன்றைய பொருளாதார நெருக்கடி வரையும் இந்தியாவே தமிழ்களுக்கு பக்கபலமாக இருந்து வருகின்றது.

அதேபோன்று தற்போது பதவியேற்கும் பாரத பிரதமர் மோடி தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை எட்ட முழுமையாக பங்காற்ற வேண்டும். – என்றார் அவர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜூலை 10 முதல் கட்டாயமாக புதிய சம்பளத்தை வழங்க வேண்டும்

## தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



“எதிர்வரும் 10 ஆம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை வழங்கும்போது, பழைய சம்பளத்தையே சிலருக்கு வழங்கவேண்டி ஏற்பட்டாலும், அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் கட்டாயமாக புதிய சம்பளத்தை வழங்க நேரிடும்.”

– இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெல்வோம் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் திருகோணமலை மாவட்டத்திற்கான நிகழ்வில் கலந்து கொண்டபோதே அமைச்சர் மனுஷ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“10 ஆம் திகதி சம்பளம் வழங்கப்பட்டாலும் ஒவ்வொரு மாதத்தின் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையே சம்பளம் கணக்கிடப்படுகின்றது.

எனவே, இந்த மாதத்தின் 10 நாள்கள் மாத்திரமே அதிகரித்த சம்பளத்துடன் தொடர்புபடும் என்பதால், இந்த மாதம் 10 ஆம் திகதி சம்பளத்தை வழங்கும்போது பழைய சம்பளத்தையே சிலருக்கு வழங்க முடியும்.

எனினும், அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் கட்டாயமாக புதிய சம்பளத்தை வழங்க வேண்டும். அது மாத்திரமன்றி, பழைய சம்பளத்தின் நிலுவை கொடுப்பனவையும் இந்த மாதத்தின் பத்து நாள்களுக்கு அதிகரித்த சம்பளத்தையும் நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

தனியார் தோட்டங்களில் சம்பளத்தை வழங்குவதற்கு முன்னதாக அரச தோட்டங்களில் சம்பளத்தை வழங்கி அரசாங்கம் முன்னுதாரணமாக செயற்படும்”– என்றார்.




# இதய அதிர்வு கண்காணிப்பு இயந்திரம் யாழ். வைத்தியசாலைக்குக் கையளிப்பு









யாழ்.போதனா வைத்தியசாலையின் பயன்பாட்டிற்காக, இதய அதிர்வு கண்காணிப்பு இயந்திரம் (Eco Machines) ஒன்று இலங்கைக்கான கனேடிய உயர்தானிகரால் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

போதானா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சி மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது 'கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின்' அனுசரணையில் இந்த இயந்திரம் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் கலந்து கொண்டு வைத்திய உதவிப் பொருள்களைக் கையளித்திருந்தார்.

மேற்படி இதய அதிர்வு இயந்திரம் உதவியுடன் நோயாளர்களுக்கு இதய சத்திர சிகிச்சையை வழங்க முடியும்.



# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவது உறுதி என்கின்றார் விஜேதாஸ ராஜபக்ஷ

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் களமிறங்குவது உறுதியென அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜ பக்ஷ தெரிவித்தார்.

கொடகமையில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற் பாட்டாளர்களுடனான சந்திப்பில், ஊடக வியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தமது கட்சியில் இருந்து கொண்டு வேறு கட்சியின் தலைமைத்துவத்தை பெற்றுக்கொண் டமை தொடர்பில், அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செய லாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளராக ரோஹித அபேகுணவர்தன நேற்று நியமிக்கப் பட்டார்.

கட்சியின் நிறைவேற்றுச் சபை மற்றும் அரசியல் குழு கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்ட நிலை யில், அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ விற்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் சாகல ரத்நாயக்கவினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.




# கொழும்பு - கண்டி பிரதான வீதியின் பஹல கடுகன்னாவ பகுதிக்குப் பூட்டு

கொழும்பு – கண்டி பிரதான வீதியின் பஹல கடுகன்னாவ பகுதியை இன்று கட்டம் கட்டமாக மூட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கேகாலை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் அபாய நிலையில் காணப்படும் கற்பாறைகளை அகற்றுதல் மற்றும் மரக்கிளைகளை வெட்டியகற்றும் நடவடிக்கைகள் இன்று முன்னெடுக் கப்படவுள்ளதால், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு – கண்டி பிரதான மார்க்கத்தின் பஹல கடுகன்னாவ 98 ஆம் மைல்கல்லை அண்மித்து காணப்படும் பாறைகள் தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனால் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு கேகாலை மாவட்ட செயலாளரினால் பொதுமக்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் கடத்தல்காரர் வலபொல பொட்டா சிக்கினார்!

வலபொல பொட்டா என அழைக் கப்படும் போதைப்பொருள் கடத்தல்காரர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் பாணந்துறையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் பெண் ஒருவரும் மற்று மொரு நபரும் கைது செய்யப்பட் டுள்ளனர் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

104 கிராம் ஹெரோயின் மற்றும் 10 லட்சம் ரூபா பணம் என்பன சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை வீடொன்றில் மறைந்திருந்த போதே சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்த கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானம்




தாம் முன்னெடுத்துள்ள சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை நாளை நள்ளிரவு முதல் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலின் போது தங்களின் யோசனைகளை முன்வைத்தனர் எனவும், அது தொடர்பில் ஆராய்ந்து பதில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும தொடர்பான பிரச்சினைகளுக்கு 14 நாள்களிலும், உரித்து வேலைத்திட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஒரு வாரத்திலும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், 25 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற வுள்ள கலந்துரையாடலின் போது உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாத பட்சத்தில், தங்களின் தொழிற்சங்க நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட விடயம்:

# வசந்த கரன்னாகொடவின் மனுவை விசாரிக்க ஐந்து நீதியரசர்கள் ஆயம்

2008 இல் – யுத்த சமயத்தில் – 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கை ஒட்டி முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவினால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு மீதான விசாரணைக்காக ஐவரடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாமை பெயரிடுவார் என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன, நீதியரசர் ஷஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமக்கு எதிரான அந்த வழக்கை நிறுத்தும்படி உத்தரவிடக் கோரி முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முழுமையான நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் விசாரிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், தற்போது ஐவரடங்கிய நீதியரசர் குழாமைப் பெயரிட்டுள்ளது.

இதன்போது, பாதிக்கப்பட்ட பெற்றோர் சார்பில் விடயங்களை முன்வைப்பதற்குத் தாங்கள் எதிர்பார்த்துள்ளனர் எனவும், வசந்த கரன்னாகொட எந்த வகையிலும் தப்பிக்க முடியாதென்பதை நிரூபிக்கும் வகையில், நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைப்போம் எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்துள்ளார்.

### 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் விவகாரம்:

# பிளாஸ்டிக் கழிவுகளை ஆய்வு செய்ய விசேட நிபுணர் இலங்கை வருகை

'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் தீ விபத்திற்கு உள்ளாகிக் கடலில் மூழ்கியதால் கரையொதுங்கிய பிளாஸ்டிக் கழிவுகளை ஆய்வு செய்வதற்காக பிரித்தானியாவைச் சேர்ந்த விசேட நிபுணர் பேராசிரியர் ரிச்சர்ட் தாம்சன் நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

புத்தளம், வத்தளை பிரதேசங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை அவர் ஆய்வு செய்யவுள்ளார்.

அத்துடன், அவருக்கு உதவும் வகையில் ஆஸ்திரேலியாவின் சட்டத்தரணி மிச்செல் டெய்லரும் நாட்டிற்கு வருகை தந்துள்ளார் என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



பிளாஸ்டிக் கழிவுகள் ஊடாக நாட்டின் கரையோர வளங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான ஆய்வு அறிக்கையை பேராசிரியர் ரிச்சர்ட் தாம்சன் தயாரிக்கவுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அவர் இதற்கு முன்னரும் நாட்டுக்கு வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.06.2024



மேஷம்

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.



ரிஷபம்

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.



மிதுனம்

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும். அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்படச் செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.



கடகம்

இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பொறுப்புகள் காணப்படும். இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.



சிம்மம்

இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும். இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.



கன்னி

இன்று சாதகமான நாள். உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.



துலாம்

இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும். இந்தச் சவால்களைத் திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.



விருச்சிகம்

இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மனநிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.06.2024




இன்று மந்தமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாளாக அமையாது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப்போட வேண்டும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டத்தக்க வகையில் இருக்காது. பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ளவும். இதனால் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. இன்று வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று உங்கள் ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளைத் திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று காதலில் முழு திருப்தி உண்டாவதற்கு உகந்த நாள். இன்று காதலில் புதிய அத்தியாயத்தை தொடங்குவீர்கள்.

நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் இன்று அதிக லாபம் கிடைக்கும்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் இன்று காணப்படும். பணியில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்குப் பொருத்தமான நாளாக உணர்வீர்கள். உங்கள் காதலை உங்கள் தந்தையிடம் கூறுவீர்கள். அது உங்களுக்குச் சாதகமாக இருக்கும்.

ஏழைகளுக்கு தொண்டு செய்து அவர்கள் ஆசி பெறுவதன் மூலம் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




